# Tamil Murli Quiz 02-10-2015

தமிழ் முரளி வினாடி-வினா
முரளியினை மறுமுறை நினைவுற உதவும் வினாடி-வினா. இன்றைய முரளியிலிருந்தே கேள்விகள் கேட்கப்படும்.
இங்கே கிளிக் செய்க: 20 நிமிட முரளியின் எம்பி3 கோப்புகள் மற்றும் பழைய வினாடி-வினா.abc

**Q.1)** சரியான **விடைகளைத்** தேர்ந்தெடுக்கவும்:

**நான் உங்களுக்கு வழி கூறிக் கொண்டிருக்கிறேன் என்று தந்தை கூறுகின்றார். அந்த வழி உலகத்தினருக்குத் தெரியாது. எதற்கான வழியை கூறுகின்றார்?**

- A. முக்தி- ஜீவன்முக்தி
- B. கதி-சத்கதி
- C. ஆத்ம அபிமானி ஆகுவதற்க்கான
- D. உலக சேவை செய்வதற்கு

**Q.2)** சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

**ஆன்மீகத் தந்தை கூறுகின்றார் - நான் வழி காண்பிக்கின்றேன். ஆனால் அந்த வழியை எப்போது தான் எளிதாக பார்க்க முடியும்?**

- A. பாபா கூறும் ஞானத்தினை புரிந்தால்
- B. நடைமுறையில் நற்குணங்களை பின்பற்றினால்
- C. முதலில் தன்னை ஆத்மா என்ற நம்பிக்கை இருந்தால்
- D. ஞானக் கண் கொண்டிருந்தால்

**Q.3)** கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்பவும்:

**இராவண இராஜ்யத்தில் நீங்கள் பாவ காரியங்கள் செய்கிறீர்கள். இந்த பாவ காரியங்கள் அழுக்கான காரியங்களாக ஆகிவிடுகிறது. சத்யுகத்தில் இராவணனே இல்லையெனும் பொழுது காரியங்கள் ______________ ஆகிவிடுகிறது.**

- A. சுகர்மம்
- B. அகர்மமாக
- C. புண்ணிய காரியம்
- D. சிரேஷ்டமானதாக

**Q.4)** சரியா? தவறா?

**சிறிய குழந்தையை சதோபிரதானம் என்று கூறலாம். சிறிய குழந்தை மகாத்மாவை விட உயர்ந்தது என்று கூறப்படுகிறது.**

- A. சரி
- B. தவறு

**Q.5)** சரியா? தவறா?

**தேவதைகள் பலர் இருக்கின்றனர். அவர்களிடமிருந்து எந்த ஆஸ்தியும் கிடைப்பது கிடையாது. இந்த பிரம்மாவிடமிருந்தும் உங்களுக்கு ஆஸ்தி கிடைப்பது கிடையாது.**

- A. சரி
- B. தவறு

**Q.6)** கோடிட்ட இடத்தில் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

**ஆத்மா என்றால் நிராகாரமானது. சிவனும் நிராகாரமானவர். உங்களது ஆத்மாவும் பிந்துவானது, மிகவும் சிறியதாக இருக்கிறது. அதை யாரும் ________________யின்றி பார்க்க முடியாது. ______________________யை தந்தை தான் கொடுக்கின்றார். __________________________ கொடுக்கும் வள்ளல் நான் தான் என்று தந்தை கூறுகின்றார்.**

- A. ஞானம்
- B. புத்தி
- C. தெய்வீகப் பார்வை
- D. சக்தி

**Q.7)** <u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>

**தந்தை குழந்தைகளை இராதை கிருஷ்ணராக இருந்து பின்பு லெட்சுமி நாராயணனாக ஆகும் தேவதைகளாக ஆக்குகின்றார். ஆனால் அதற்கு என்ன செய்ய வேண்டுமென தந்தை கூறுகிறார்?**

- A. ஸ்ரீமத் படி நடக்க வேண்டும்
- B. வாய்வழிவம்சத்தினர்களாக மாற வேண்டும்
- C. நற்குணங்களைத் தாரணை செய்ய வேண்டும்
- D. ஆத்மா அபிமானி ஆக வேண்டும்

**Q.8)** <u>கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்பவும்:</u>

**இன்றைய நாட்களில் உலகம் மிகவும் மோசமாக இருக்கிறது. அனைத்தையும் விட மிக மோசமான நோய் ________ ஆகும்.**

- A. விகாரங்கள்
- B. ஆணவம்
- C. சினிமா
- D. வெளியில் சாப்பிடுவது

**Q.9)** <u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>

**பிராமணக் குழந்தைகளாகிய நீங்கள் தான் சுயதரிசன சக்கரதாரிகளாக ஆக வேண்டும், தேவதைகள் அல்ல. ஆனால் பிராமணர்களுக்கு இந்த அலங்காரம் கொடுக்கப்படுவது கிடையாது. தேவதைகளுக்கு தான் கொடுத்து விட்டனர். ஏன்?**

- A. ஏனெனில் படித்துக் கொண்டிருகிறார்கள்
- B. ஏனெனில் முயற்சியாளர்களாக இருக்கின்றனர்
- C. ஏனெனில் அடிக்கடி சுயதரிசன சக்கரத்தை சுற்றுவதில்லை
- D. ஏனெனில் தகுதி இல்லை

**Q.10)** <u>சரியா? தவறா?</u>

**எந்த சேவையானது தடையாக இருக்கிறதோ அதை சேவை என்றே கூற முடியாது.**

- A. சரி
- B. தவறு